- நீரிழிவு நோய், இருதய நோய்கள், இரத்தக் கொதிப்பு அல்லது குடல் நோய்கள் உங்களுக்கு தற்போது இருக்கிறதா, அல்லது எப்போதாவது இருந்ததா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் கர்ப்பமடைந்துள்ளீர்கள், கர்ப்பம் தரிக்க நினைக்கிறீர்கள், அல்லது தாய்ப்பால் கொடுக்கிறீர்கள் என்றால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

மருத்துவர் கூறினாலொழிய, வயிற்றுப்போக்கு மருந்துகளை 2 நாட்களுக்குமேல் சாப்பிடக்கூடாது. தொடர்ந்து சில காலத்திற்கு மருந்து சாப்பிடத் தேவை இருந்தால், உங்கள் முன்னேற்றத்தை மருத்துவர் உங்கள் வருகைகளின்போது தொடர்ந்து கண்காணிப்பார்.

வயிற்றுப்போக்கு இரண்டு நாட்களுக்குள் நிற்கவில்லையென்றால், அல்லது உங்களுக்குக் காய்ச்சல் ஏற்பட்டால், அல்லது மலத்தில் இரத்தம்/சளி காணப்பட்டால், மருத்துவரிடம் உடனே சோதித்துக் கொள்ளுங்கள்.
குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு வயிற்றுப்போக்கு இருந்தால், அவர்களது சிகிச்சை குறித்து மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் ஆலோசனை பெறுங்கள்.

குடல் அசைவைக் குறைக்கும் மருந்துகள் அதிக துக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கலாம். உங்களுக்கு எப்படி என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். விழிப்பு நிலையில் இல்லாதபோது வாகனம் ஓட்டுதல், இயந்திரம் இயக்குதல் போன்ற வேலைகளைச் செய்வது ஆபத்தில் முடியலாம்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.


Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# வயிற்றுப்போக்கு சிகிச்சைக்கான மருந்துகள்

## Medicines To Treat Diarrhoea

T43R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

இந்த மருந்துகள் வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தி, வயிற்றுப்போக்கினால் ஏற்படும் சிரமங்களிலிருந்து நிவாரணம் அளிக்கின்றன.

இந்த மருந்துகளில் பல வகைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் வேலை செய்கின்றன. மருந்து உட்கொள்ளும் முறை ஒவ்வொரு வகைக்கும் வேறுபடுவதால், உங்கள் மருந்து எந்த வகையைச் சேர்ந்தது என்பதை நீங்கள் அறிந்து வைத்திருப்பது முக்கியம். மருந்தின் வகைகள் கீழே தரப்பட்டுள்ளன:

| மருந்து வகை | எடுத்துக்காட்டுகள் | வேலை செய்யும் விதம் |
| --- | --- | --- |
| உறிஞ்சுபவை (Adsorbent) | துண்டப்பட்ட கரி (அல்ட்ராகார்பன்) கேஓலின் (Kaolin) (கேஓபெக்டேட்) இஸ்பாகுலா தோல் (மியூகோ∴பால்க்-Mucofalk) | சிறுகுடலிலுள்ள நச்சுப் பொருட்களையும் வலி உண்டாக்கும் பொருட்களையும் இவை உறிஞ்சுகின்றன. |
| குடல் அசைவைக் குறைப்பவை (Antiperistaltic) | அட்ரோபைன் கலந்த டை∴பினாக்சிலேட் (Diphenoxylate with Atropine) லோமோடில் (Lomotil) லோபெரமைட் (Loperamide) இமோடியம் (Imodium) | இம்மருந்துகள் குடல் அசைவதை மெதுவடையச் செய்து வயிற்றுப்போக்கை நிறுத்த உதவுகின்றன. |
| நீர்ச்சத்து & எலக்ட்ரோலைட் தருபவை (Fluid & Electrolyte Replacement) | இவை, வாய்வழி உட்கொள்ளும் மறுநீர்ச்சத்து உப்புகள் (செர்விடிராட்® -Servidrat®) | வயிற்றுப்போக்கின்போது உடல் இழக்கும் நீர்ச்சத்தையும், சில முக்கிய உப்புகளையும் இவை மீண்டும் உடலுக்குத் தருகின்றன. |





| மருந்து வகை | எடுத்துக்காட்டுகள் | வேலை செய்யும் விதம் |
| --- | --- | --- |
| செரிமான நொதிகள் (Digestive Enzymes) | லாக்டோபாசிலஸ் (Lactobacillus) (லாக்டியோல் ∴போர்ட் - Lacteol Fort®) லிபேஸ் (Lipase) (என்சைபிளக்ஸ் - Enzyplex®) | தீய நுண்ணுயிர்கள் குடலில் வளர்வதைத் தடுத்து, குடல் வழக்கநிலைக்குத் திரும்ப இவை உதவுகின்றன. |

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

மருத்துவர் கூறியதைப் பின்பற்றுங்கள். காய்ச்சல் ஏற்பட்டால், அல்லது மலத்தில் சளி அல்லது இரத்தம் காணப்பட்டால் மருத்துவரைப் பாருங்கள்.

உறிஞ்சும் மருந்து எடுப்பவர்களுக்கு:

- கரி மருந்து (charcoal) எடுக்கும்போது பால், ஐஸ்கிரீம் மற்றும் சுவைபானம் (sherbet) உட்கொள்ளாதீர்கள். இவை மருந்தின் செயலாற்றலைக் குறைத்துவிடும்.
- கரி மருந்து உட்கொண்ட 2 மணி நேரத்திற்குள் வேறு எந்த மருந்தும் உட்கொள்ளாதீர்கள். அப்படி உட்கொண்டால், அந்த மற்றொரு மருந்து உடலால் உறிஞ்சப்படாது.

குடல் அசைவைக் குறைக்கும் மருந்து எடுப்பவர்களுக்கு:

- இந்த மருந்தை உணவுக்குமுன் சாப்பிட்டு வயிறு சரியில்லை என்றால், மருந்தை உணவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

வாய்வழி உட்கொள்ளும் மறுநீர்ச்சத்து உப்புகள் எடுப்பவர்களுக்கு:

- பௌடர்/மாத்திரையை கொதித்து ஆறவைத்த தண்ணீரில் கரையுங்கள்.
- இந்த கரைசலை மீண்டும் கொதிக்க வைக்காதீர்கள்.
- தினமும் புதிதாக கரைத்துக் கொள்ளுங்கள். கரைசல் மீந்துவிட்டால் நாளின் இறுதியில் அதைக் கொட்டிவிடுங்கள்.
- குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு வயிற்றுப்போக்கு இருந்தால், முதல் 24 மணி நேரத்திற்கு மருந்துக் கரைசலை மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக, அடிக்கடி கொடுக்க வேண்டும்.

செரிமான நொதிகள் எடுப்பவர்களுக்கு:

- மருந்துக் குருணைகளை (granules), சிரியல் எனப்படும் காலைத் தானிய உணவு (cereal), மற்ற உணவுகள், பழச்சாறு அல்லது தண்ணீரில் கலந்து கொள்ளலாம்.

வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு மருந்து உட்கொள்வதோடு, உடல் இழக்கும் நீர்ச்சத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும், முறையான உணவு உண்ண வேண்டும். முதல் 24 மணி நேரத்திற்கு, காஃபீன் இல்லாத தெளிவான திரவங்களை அதிகமாக அருந்துங்கள். அடுத்த 24 மணி நேரத்திற்கு, கஞ்சி, ரொட்டி, சமைத்த சிரியல் மற்றும் கிராக்கர் பிஸ்கெட்டுகள் போன்ற காரமில்லாத உணவுகளை சாப்பிடுங்கள்.

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

மருந்தை முறையாக எடுத்துவரும்போது, ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்துகள் ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

இம்மருந்துகளால் சில பக்க-விளைவுகள் ஏற்படலாம். பக்க-விளைவுகள் முதலில் இருந்தாலும், மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்:



நோயாளி தகவல் கையேடு । **வயிற்றுப்போக்கு சிகிச்சைக்கான மருந்துகள்**

| மருந்தின் வகை | பக்க-விளைவுகள் |
|---|---|
| உறிஞ்சுபவை | வாந்தி, மலச்சிக்கல், கருநிற மலம்(கரி மருந்து எடுத்தால்) |
| குடல் அசைவைத் தடுப்பவை | மந்தம், வாய் உலர்தல், தலைச்சுற்றல், அதிக களைப்பு, வயிற்றுப் பிடிப்பு |
| மறுநீர்ச்சத்து உப்புகள் | வாந்தி |
| செரிமான நொதிகள் | வயிற்றுப்பொருமல் |

வயிற்றுப்போக்குக்கான மருந்துகளை எடுக்கும்போது, பின்வரும் வழக்கத்திற்கு மாறான பக்க-விளைவுகள் ஏதேனும் ஏற்பட்டால் மருத்துவரைக் கலந்தாலோசிக்கவும்:

குடல் அசைவைத் தடுக்கும் மருந்துகளுக்கான பக்க-விளைவுகள்:

மங்கிய பார்வை, மூச்சிரைப்பு அல்லது சுவாசிப்பதில் சிரமம், வழக்கமில்லாத படபடப்பு, தோல் சிவத்தல், உப்பிய வயிறுடன் கடுமையான மலச்சிக்கல், 8 மணி நேரத்திற்கும் மேலாக சிறுநீர் குறைவாக கழித்தல் அல்லது கழிக்காமலேயே இருத்தல்

மறுநீர்ச்சத்து உப்புகளுக்கான பக்க-விளைவுகள் :
கண் இமைகள் உப்புதல், திடீர்வலிப்பு, இருதயத்துடிப்பு வேகமாகுதல், பாதம் அல்லது காலின் கீழ்ப்பகுதி வீங்குதல், பலவீனம், இரத்தக் கொதிப்பு.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை ஆரம்பிப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- தற்போது நீங்கள் எடுத்துவரும் மருந்துகளை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, ஆன்டிபயோடிக் மருந்துகள், அமில-எதிர்ப்பு மருந்துகள், வலி அல்லது வலிப்பு நிவாரணிகள், இதய நோய் அல்லது இரத்தக் கொதிப்பு மருந்துகள் மற்றும் வைட்டமின் மாத்திரைகள்.